# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:82** **தேதி:-14.12.2015**

## 10.12.2015 - FORUM கூட்ட முடிவுகள்

அன்பார்ந்த தோழ,ர்களே!

BSNL அனைத்து ஊழியர்-அதிகாரிகள் சங்கங்களின் கூட்டமைப்பின் ( FORUM OF BSNL UNIONS AND ASSOCIATIONS ) கூட்டம் 10.12.2015 அன்று BSNLMS அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டமைப்பின் தலைவர் தோழர். சந்தேஷ்வர் சிங் கூட்டத்திற்குத் தலைமையேற்றார். கன்வீனர் தோழர். பி. அபிமன்யு அனைவரையும் வரவேற்று, விவாதப் பொருளை விளக்கி உரையாற்றினார். பின்வரும் முடிவுகள் ஏகமனதாக எடுக்கப் பட்டன.

1) சென்னையில், முன்னெப்போதும் கண்டிராத அளவு ஏற்பட்ட மழை வெள்ளப் பெருக்கிலும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மழை வெள்ளம் காரணமாகவும் மரணமடைந்த அனைவருக்கும், குறிப்பாக சென்னை தோழர். தெய்வசிகாமணி, TM மறைவுக்கும் கூட்டம் அஞ்சலி செலுத்தியது.
2) மழை வெள்ளப்பெருக்கின்போது, பி.எஸ்.என்.எல். சேவையைச் சிறப்பாக பராமரித்த சென்னை தொலைபேசியின் நிர்வாகத்திற்கும், அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும் கூட்டம் நெஞ்சார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்தது. பி.எஸ்.என்.எல். புரிந்த சேவை அனைத்துத் தரப்பு பொதுமக்களின் பாராட்டுக்களையும் ஒருசேரக் குவித்துள்ளது. இந்த நல்லெண்ணத்தையும், நம்பிக்கையையும் மேலும் நிலைநிறுத்திக் கொள்ள, மழை வெள்ளத்தின் போது ஏற்பட்டுள்ள பழுதுகளைச் சரி செய்வதற்கு அனைத்து விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு சென்னையின் அனைத்து ஊழியர்களையும் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.
3) சென்னை மழை வெள்ளத்தின் போது, பி.எஸ்.என்.எல். மட்டுமே பொதுமக்களுக்கு சேவை வழங்கியதோடு, மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளது. இந்தப் பேரிடர் காலத்தில், அனைத்து தனியார் நிறுவனங்களும் சேவையைப் பெரும்பாலும் நிறுத்தி விட்டன. சென்னை விமான நிலைய நிர்வாகம் கூட பி.எஸ்.என்.எல். உதவியோடுதான் தனது போக்குவரத்து சேவைகளை அளிக்க முடிந்தது. எனவே, இந்த சூழ்நிலையில், அனைத்து மத்திய, மாநில அரசுத் துறைகளும், பொதுத்துறை நிறுவனங்களும் பி.எஸ்.என்.எல். தரைவழி, மொபைல், தகவல் மின்சுற்று (சர்க்யூட்) இணைப்புகளையே பயன்படுத்திட உரிய நடவடிக்கை எடுக்குமாறு பிரதமரை வலியுறுத்தி கூட்டமைப்பின் சார்பில் கடிதம் எழுத முடிவு செய்யப் பட்டுள்ளது. மேலும் அரசு அலுவலகக் கட்டிடங்களிலும், விமான நிலையங்களிலும், தனது BTS- களை (அடிப்படை தொடர்பு நிலையம்) நிறுவிக் கொள்ள பி.எஸ்.என்.எல்.- க்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.
4) சென்னையிலும், தமிழகத்தின் பிற பகுதிகளிலும் மழை வெள்ளம் காரணமாக கடுமையாக பாதிக்கப் பட்டுள்ள ஊழியர்களுக்கு உதவிட விருப்பமுள்ள ஊழியர்களின் சம்பளத்தில், ஒரு நாள் அடிப்படை ஊதியத்தை நன்கொடையாகப் பெறுமாறு, பி.எஸ்.என்.எல். நிர்வாகத்தைக் கேட்டுக் கொள்வதென கூட்டம் முடிவு செய்தது. எனினும், பாதிக்கப் பட்டுள்ள ஊழியர்களுக்கு நிவாரண உதவி அளிப்பதற்கு பி.எஸ்.என்.எல். நிர்வாகம் நேரடியாக

நன்கொடை நிதியைப் பயன்படுத்த வேண்டும் என கூட்டத்தில் வலுவாகக் கருத்துத் தெரிவிக்கப் பட்டது, பி.எஸ்.என்.எல். நிர்வாகத்துடன் இது குறித்து மேலும் விவாதிக்கப் படும்.

5) **1.1.2016 முதல் "புன்னகையோடு சேவை" என்ற** 100 **நாள் இயக்கத்தை நடத்திடுமாறு அனைத்து பி.எஸ்.என்.எல். அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும் அறைகூவல் விடுக்க கூட்டத்தில் முடிவெடுக்கப் பட்டுள்ளது. இந்த** 100 **நாள் இயக்கத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு :**

- **மொபைல், தரைவழி, பிராட்பேண்ட் இணைப்புகளைத் தீவிரமாக சந்தைப்படுத்துதல்.**
- **பழுதற்ற சேவையை உத்தரவாதம் செய்தல்.**
- **தரைவழி, பிராட்பேண்ட் மறு இணைப்பு வழங்குதல்.**
- **Enterprises Business, Leased Lines, CUG, 3G ஆகிய வாடிக்கையாளர்களுக்கு சிறப்பு கவனம்.**
- **MNP- க்கு சிறப்பு கவனம்.**

6) **பி.எஸ்.என்.எல். ஓய்வூதியர்களுக்கு** 78.2% **பஞ்சப்படி இணைப்பு வழங்குவதில் ஏற்பட்டுள்ள அளவு கடந்த தாமதம் குறித்து கூட்டம் கடுமையான அதிருப்தியைத் தெரிவித்தது. நீண்ட காலமாக இந்தக் கோரிக்கை இழுத்தடிக்கப் பட்டு வருகிறது. எனவே, இக்கோரிக்கையை உடனடியாகத் தீர்த்து வைக்குமாறு வலியுறுத்தி, 22.12.2015 அன்று, கறுப்பு அட்டை அணிந்து, கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்திடுமாறு கூட்டமைப்பு அறைகூவல் விடுத்துள்ளது.** மேலும், இப்பிரச்னையை உடனடியாகத் தீர்த்து வைக்கக் கோரி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைதொடர்புத் துறை அமைச்சருக்கும், பிரதமருக்கும் கூட்டமைப்பின் சார்பில் கடிதம் எழுதுவதெனவும் தீர்மானிக்கப் பட்டது.

7) மேலும், 78.2% பஞ்சப்படி இணைப்பின் அடிப்படையில், அலவன்சுகள் உடனடியாக உயர்த்தப் பட வேண்டும் என்று வலியுறுத்தி, பி.எஸ்.என்.எல். தலைமை நிர்வாக இயக்குநருக்குக் கடிதம் எழுதவும் தீர்மானிக்கப் பட்டது.

மேற்காணும் முடிவுகளை வெற்றிகரமாக நிறைவேற்றிட கூட்டமைப்பின் அனைத்து சங்கங்களும் முழுமையான ஒத்துழைப்பை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**